# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.70/2020

2025—ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.1 கோகுலகிருஷ்ணன் வயது 54 த/பெ மோகனவேல்**

**நேரம் - 12.00**

**குறுக்கு விசாரணை**

நான் நிரூபண பிரமாண வாக்குமூலமான முதல் விசாரணையை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் லட்சுமி என்பவருக்கு கண் குறைபாடு உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வேலூர் மாவட்டம், சைதாப்பேட்டைதான் பூர்வீகம் என்றால் சரிதான். வெங்கடராமன் என் தந்தை வழி தாத்தா என்றால் சரிதான். என் தந்தை மோகனவேலும், டிக்காராமன் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

2. என்னுடன் பிறந்தவர்கள் பிரகாஷ், மஞ்சுளா, கல்பனா, செந்தில்குமார் என்றால் சரியல்ல, என் உடன் பிறந்தவர்கள் கல்பனா, மகேஸ்வரி, பிரகாஷ் ஆவார்கள். டிக்காராமன் என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகன்கள் மற்றும் 1 மகள் ஆகும். நாங்கள் அனைவரும் கூட்டுக் குடும்பமாகதான் வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. நான் வேலூர் சைதாப்பேட்டையில் எத்தனை வருட காலமாக வசித்து வருகிறேன் என்றால் நான் பிறந்த 1971ம் ஆண்டிலிருந்து 2000 வரை அங்குதான் வசித்து வந்தேன்.

3. என்னுடன் பிறந்த சகோதரி மற்றும் டிக்காராமனுக்கு பிறந்த பிள்ளைகளுக்கும் ஒரே நாளில்தான் காதணி விழா நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி காதணி விழா நடைப்பெற்றதை பற்றி முத்துசாமி மற்றும் லட்சுமியம்மாள் ஆகியோருக்கு எந்த விவரம் தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் காதணி விழாவிற்கு வரவில்லை என்றாலும், நான் பொய்யான சங்கதிகளை சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் லட்சுமியம்மாள் என்னை வளர்ப்பு மகனாக ஏற்றுக்கொண்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சுமார் எனக்கு 54 வயது இருக்கும்போதுதான் மேற்படி லட்சுமியம்மாள் என்னை வளர்ப்பு மகனாக ஏற்றுக்

கொண்டார்கள் என்றால் சரிதான். நான் சிறு வயதில் இருக்கும் போது லட்சுமியம்மாள் மற்றும் முத்துசாமி ஆகியோர் என் பெற்றோரிடம் என்னை வளர்ப்பு மகனாக தத்தெடுக்கப் போவதாக கூறவில்லை என்றால் சரிதான்.

5. என்னுடைய 54 வயதில் எந்தவிதமான ஆவணங்களை தயார் செய்யாமல் என்னை வளர்ப்பு மகனாக மேற்படி லட்சுமியம்மாள் மற்றும் முத்துசாமி ஆகியோர் ஏற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். என் தந்தை மோகனவேல் எந்த ஆண்டு காலமானார் என்றால் 1997ம் ஆண்டு காலமானார். என் தந்தை இறந்த பிறகு என் தந்தையின் சகோதரர் ஆன என் சித்தப்பா டிக்காராமன் மற்றும் அவரது மனைவி இன்றுவரை உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான்.

6. நான் பி.வா.சா.ஆ.1 ஆகிய திருமண பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எந்த ஆண்டில் எனக்கு திருமணம் ஆனது என்றால் 2001ம் ஆண்டு திருமணம் நடந்தது. என் மனைவி பெயர் புஷ்பா ஆகும். என் மனைவி புஷ்பா திருமணத்திற்கு முன்பு அவரின் பெற்றோர்கள் தாவா சொத்தின் பக்கத்து தெருவில்தான் இன்றுவரை குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் மனைவி புஷ்பாவின் பெற்றோருக்கு ஆரணி சைதாப்பேட்டையில் பூர்வீகமாக எந்த சொத்தும் இல்லை என்றால் சரிதான். இன்றும் அவர்கள் வாடகை வீட்டில்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

7. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் டிக்காராமன், ராஜ்யம் பெயரில்லாமல் முத்துசாமி, லட்சுமியம்மாள் பெயரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் முத்துசாமி, லட்சுமியம்மாள் பெயரை குறிப்பிட்டு என் திருமண பத்திரிக்கையில் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் திருமணம் ஆன பின்னர் நானும் என் மனைவியும் 2020ம் ஆண்டுவரை வேலூர் சைதாப்பேட்டையில் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. பின்னர் எங்கு வசித்து வந்தீர்கள் என்றால் வேலூர் காட்பாடி காந்தி நகரில் 2012ம் வருடம் வரை வசித்து வந்தோம். அதன் பின்னிட்டு குடும்ப சூழ்நிலை காரணமாக ஆரணி அண்ணா நகரில் 2012ம் ஆண்டு முதல் 2019 வரை அங்கு குடியிருந்தோம். **சாட்சி தன்னிச்சையாக அதன் பின்னிட்டு லட்சுமியம்மாள் என்னை அழைத்து அவர்களுக்கு பாதுகாப்பு வேண்டி அவர்களுடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் நான் ஆரணி அண்ணா நகரில் வசித்து வந்தேன் என்று கூறினார்.**

8. 2012 முதல் 2019 வரை நானும் என் பிள்ளைகள் மற்றும் மனைவி வாடகை வீட்டில்தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். நான் குடியிருந்த காலத்தில் எனக்கும், முத்துசாமி மற்றும் லட்சுமியம்மாளுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள திருமண பத்திரிக்கையில் எந்த அச்சகத்தில் அச்சு அடிக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சாட்சி பி.வா.சா.ஆ.1ஐ பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். நான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் நானாக தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

9. முத்துசாமி முதலியார் தகப்பனார் பெயர் அருணகிரி முதலியார் என்றால் சரிதான். முத்துசாமி தாயார் பெயர் தனலட்சுமி அம்மாள் என்றால் சரிதான். முத்துசாமி உடன் பிறந்தவர்கள் சாரதா அம்மாள், புஷ்பா என்றால் சரிதான். முத்துசாமி அக்கா சாரதா அம்மாள் பேத்தி தாவா சொத்துள்ள தெருவில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். லட்சுமியம்மாள் கணவர் முத்துசாமி எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2016ம் ஆண்டு இறந்தார். முத்துசாமி இறப்பிற்கு என்னை லட்சுமி அம்மாள் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

10. 2016ம் ஆண்டு முத்துசாமி இறந்த போது அவரின் இறப்பு ஈம சடங்குகளை வாதி குப்புசாமிதான் செய்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு என்றால் யார் மேற்படி இறப்பு ஈம சடங்குகளை செய்தார் என்றால் அவர் மனைவி லட்சுமியம்மாள் செய்தார்கள். தாவா சொத்தில் முத்துசாமி தந்தை அருணகிரி முதலியாருக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரிதான். இந்த சொத்தை தனலட்சுமியம்மாள் 14.05.1955 அன்று கோவிந்தராஜ் முதலியாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

11. மேற்படி சொத்து முத்துசாமியின் தாயார் சொத்து என்றால் சரிதான். 21.11.2016 அன்று லட்சுமியம்மாள் வாதி குப்புசாமிக்கு வா.சா.ஆ.1 ஆன உயில் ஆவணத்தை எழுதி வைத்தார் என்றால் சரிதான். வாதி குப்புசாமிதான் வா.சா.ஆ.1 ஏற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் வா.சா.ஆ.1 ஏற்பட்ட காலத்திலிருந்து 2020ம் ஆண்டு வரை லட்சுமியம்மாளுக்கு தேவையான மருத்துவம் மற்றும் இதர செலவுகளை பார்த்து பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல.

12. இந்த விவரங்கள் எனக்கு எந்த விதத்தில் தெரியாது என்றால் முத்துசாமி அவர் இறப்பதற்கு முன்பு வரை தறி வேலை செய்து வந்தார், மேலும் முதியோர் பணம் இருவருக்கும் வந்தது. மேற்படி விவரங்கள் எனக்கும் என் மனைவி புஷ்பாவிற்கும் தெரியும் என்றாலும், ஆனால் இவ்வழக்கிற்காக பொய் சங்கதிகளை கூறுகிறோம் என்றால் சரியல்ல. வாதி குப்புசாமி என்பவர் லட்சுமி அம்மாளின்

உடன் பிறந்த சகோதரி மகன் ஆவார் என்றால் சரிதான். ஆகையால் அக்கா மகன் என்ற முறையில் வாதி குப்புசாமிதான் லட்சுமியம்மாளை சரியான முறையில் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல.

13. லட்சுமியம்மாள் மற்றும் முத்துசாமி இருவரும் சேர்ந்து குப்புசாமிக்கு எழுதி வைத்த உயில் பற்றி என் மாமனார், மாமியார் மற்றும் மச்சான் ஆகியோருக்கு தெரியும் என்றால் தெரியாது. 02.03.2009ம் ஆண்டு லட்சுமியம்மாள் மற்றும் முத்துசாமி இருவரும் சேர்ந்து வாதி குப்புசாமிக்கு அவர்களை பராமரித்து வந்ததற்காக உயிலை எழுதி வைத்தார்கள் என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணமான லட்சுமி அம்மாள் எனக்கு எழுதி வைத்த உயில் சொத்துக்களில் லட்சுமியம்மாளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

14. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3ல் சாட்சி கையெழுத்திட்ட பச்சையப்பன் மற்றும் பழனிவேல் ஆகியோர் லட்சுமியம்மாளின் உறவினர்கள் எனறு குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் லட்சுமியம்மாளுக்கு மேற்படி 2 நபர்களும் எந்தவித உறவுமுறைகாரர்கள் இல்லை என்றால் சரியல்ல, தூரத்து உறவுக்காரர்கள். மேற்படி 2 கையொப்பமிட்ட சாட்சிகளும் என் மனைவி புஷ்பாவின் உறவினர்கள் என்றால் சரிதான், தூரத்து உறவினர்கள். தாவா சொத்தின் அருகில் லட்சுமியம்மாள் அக்கா பேத்தி திலகம்தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

15. லட்சுமி அம்மாள் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2020ம் ஆண்டு இறந்தார். லட்சுமி அம்மாள் இறந்த பிறகு வாதி குப்புசாமி ஈம சடங்கு செய்ய வந்தவரை நானும் என் மனைவியும் தடுத்து நிறுத்தினோம் என்றால் சரியல்ல. நானும், வாதி குப்புசாமி 2 பேரும் லட்சுமியம்மாளுக்கு ஈம சடங்கு செய்யவில்லை என்றால் சரியல்ல. லட்சுமியம்மாள் 2019 முதல் 2020 வரை கண் பார்வையற்று படுத்த படுக்கையாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி 2019 முதல் 2020 வரை வாதி குப்புசாமிதான் அவரை பராமரித்து மருத்துவம் மற்றும் இதர செலவுகளை செய்து பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல.

16. 2019ம் ஆண்டு லட்சுமியம்மாள் படுத்த படுக்கையாக இருந்த போது அவரின் உறவினர்கள் வந்து பார்த்து சென்றார்கள் என்றால் சரியல்ல. அவர் படுத்த படுக்கையாக இருந்த காலத்தில் நானும் என் மனைவியும் குப்புசாமியை பற்றி தவறாக கூறி ஆசை வார்த்தைகளை கூறி வந்தோம் என்றால் சரியல்ல. 13.02.2019ம் தேதி எனக்கு பி.வா.சா.ஆ3 உயிலை சுய நினைவின்றி எழுதி வைத்த உயிலை பற்றி லட்சுமியம்மாளுக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு உயில் எழுதி வைக்க போகிற விவரம் முன்பே தெரியுமா என்றால் தெரியாது.

17. லட்சுமியம்மாள் ஏற்கனவே குப்புசாமி என்பவருக்கு எழுதி வைத்த உயிலை பற்றி என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். **அதன் பின்னிட்டு சாட்சி தன்னிச்சையாக ஆரம்பத்தில் சொல்லவில்லை என்று கூறினார்.** அதன் பிறகு நான் என் மாமியாருடன் சேர்ந்து அடியாட்களை கொண்டு லட்சுமியம்மாளிடம் சென்று மோசடியான உயிலை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள விவரங்களில் முத்துசாமி இறந்த பிறகு லட்சுமியம்மாள் என்பவருக்கு மேற்படி உயிலை ரத்து செய்யவோ, திருத்தம் செய்யவோ உரிமை உள்ளது என்ற வாசகம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தவறு.

18. லட்சுமியம்மாள் இறந்து விடுவார் என்ற விவரம் அறிந்து ஒரே தேதியான 13.02.2019 அன்று மேற்படி வா.சா.ஆ.1ஐ ரத்து செய்து பி.வா.சா.ஆ. 3 ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டோம் என்றால் அதுப்பற்றி தெரியாது. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கொரியர் வண்டி ஓட்டுநராக சென்னையில் பணி புரிந்து வருகிறேன். இன்றளவும் நானும் என் மனைவியும் ஆரணி சைதாப்பேட்டையில் வாடகை வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் இல்லை, என் பெரியப்பா வீட்டில்தான் வசித்து வருகிறோம். எனக்கு எழுதி வைத்த பி.வா.சா.ஆ. 3 உயில் ஆவணத்தின் படி என் பெயருக்கு பட்டா இன்றளவும் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

19. மின்சார இணைப்பு புதிதாக பெறவில்லை என்றால்' முத்துசாமி பெயரில்தான் உள்ளது. இவ்வழக்கில் குப்புசாமிதான் முத்துசாமி மற்றும் லட்சுமியம்மாளின் இறப்பு சான்றுகளை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, நானும் தாக்கல் செய்துள்ளேன். 2009 முதல் 2019 வரை வாதி குப்புசாமிதான் மின்சார கட்டணம் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். ஆகையால் 13.02.2019 அன்று ஏற்பட்ட உயில் ஆவணம் லட்சுமியம்மாளை ஏமாற்றி ஏற்படுத்திய ஆவணம் என்றாலும், வா.சா.ஆ.1 ஆவணம்தான் சரியான உயில் ஆவணம் என்றால் சரிதான். ஆகையால் மேற்படி வழக்கு வாதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

நேரம் - 1.20

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi

District Munsif,

District Munsif Court,Arni